வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்

ந.க.எண்.5324/ஆ2/2025, நாள்: 28.10.2025.

பொருள்: பள்ளிக்கல்வி-வேலூர் மாவட்டம்-சார்நிலைப்பணி-01.01.2025 நிலவரப்படி-அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்கள் நிலையிலிருந்து உடற்கல்வி இயக்குநர் நிலை-2 ஆக பதவி உயர்வு வழங்க தகுதி வாய்ந்தவர்களின் கருத்துரு சமர்ப்பிக்க தெரிவித்தல்-சார்பு.

பார்வை:

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணி சிறப்பு விதிகள் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.13 பள்ளிக் கல்வித் துறை நாள்: 30.01.2020.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.65778/சி5/இ2/2025, நாள்: .10.2025, 28.10.2025.
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள்: 27.10.2025.

-----

பார்வை(2)-இல் காணும் .10.2025 நாளிட்ட செயல்முறைக் கடிதத்தில் 01.01.2025 நிலவரப்படி பள்ளிக்கல்வி இயக்கத்தின் கீழ் இயங்கும் அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு, உடற்கல்வி இயக்குநர் நிலை-2 ஆக பதவி உயர்வு வழங்க 1999-ஆம் வருடத்தில் பணிநியமனம் பெற்ற தகுதி வாய்ந்த உடற்கல்வி ஆசிரியர்களின் விவரம் கோரப்பட்டது. இதில் **1999-ஆம் வருடம் என்பதனை 1999-ஆம் ஆண்டு வரை என திருத்தி வாசிக்குமாறு** பார்வை(2)-இல் காணும் 28.10.2025 நாளிட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இப்பொருள் சார்பாக, பார்வை(3)-இல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு, 1999-ஆம் ஆண்டு வரை பணிநியமனம் பெற்ற தகுதி வாய்ந்த உடற்கல்வி ஆசிரியர்களின் விவரங்களை நாளை (29.10.2025) இவ்வலுவலகம் சமர்ப்பிக்குமாறும், பதவி உயர்வுக்கு எவரும் இல்லை எனில் இன்மை அறிக்கையும் சமர்ப்பிக்குமாறும் அனைத்து அரசு/ நகரவை உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

28/10/25

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)

வேலூர்.

28/10/25

பெறுநர்

தலைமையாசிரியர்
அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளி
வேலூர் மாவட்டம்.

நகல்

மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை)
மாவட்டக் கல்வி அலுவலகம், வேலூர்.